[31st March 1969

(இ) சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் இதை அமுல் செய்யலாமென கூறியுள்ளதா ?

(உ) தமிழகத்தை எத்தனை பிராந்தியங்களாகப் பிரிக்க திட்டமிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ), (இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Drinking Water Supply Pipe, Tuticorin

* 310 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there was drinking water scarcity in Tuticorin due to the breakage of drinking water supply pipe in September 1968 ; and

(*b*) if so, the steps taken to meet the scarcity ?

தூத்துக்குடிக்குக் குடிதண்ணீர் வழங்கும் குழாய்.

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தூத்துக்குடிக்கு குடி தண்ணீர் வழங்கும் குழாய், 1968 செப்டம்பரில் வெடித்து குடி தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், இதை தவிர்க்க எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) நீர்வாங்கியின் பெரிய குழாய் இரட்டிக்கப்படும்.

Women and Children Hospital, Egmore

* 311 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state —

(*a*) whether a child was found missing from the Women and Children Hospital, Egmore in September 1968 ; and

(*b*) if so, the action taken thereon?

தாய் சேய் நல அரசாங்க மருத்துவ மனை, எழும்பூர்

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை, எழும்பூர் அரசாங்க தாய், சேய் நல மருத்துவ மனையிலிருந்து 1968 செப்டம்பரில் குழந்தை ஒன்று காணமல் போனதா ?

(இ) ஆமெனில், அது பற்றி எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம். பிறகு குழந்தையைத் தேடி கண்டுபிடித்து பெற்றோர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

(இ) சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு உள்ளது.